# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு** : TNPSC **ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு** - 4 (**தொகுதி** 4 & **வி ஏ ஓ**)

**பாடம்** : **வரலாறு**

**பகுதி** : **டெல்லி சுல்தானியர்கள்**

©**காப்புரிமை** :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமை பணிகள் தேர்வு** - 4 (**தொகுதி** 4 & **வி ஏ ஓ**) க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்**,

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# வரலாறு

## டெல்லி சுல்தான்கள் (கிபி.1206 முதல் கிபி.1526)

**அடிமை வம்சம்** (**மாம்லுக்**)- **கி**.**பி**.1206-1290 - **குத்புதீன் ஐபெக்**

கில்ஜி வம்சம்- **கி**.**பி**.1290-1320- **ஜலாலுதீன் கில்ஜி**

துக்ளக் வம்சம்- **கி**.**பி**.1320-1414 -**கியாசுதீன் துக்ளக்**

சையது வம்சம்- **கி**.**பி**.1414-1451- **கிசிர்கான்**

லோடி வம்சம்- **கி**.**பி**.1451-1540 - **பஹ்லூல் லோடி**

**Ø** இந்தியாவில் மாம்லுக், கில்ஜி, துக்ளக், சையது, லோடி ஆகிய மரபினர் ஆட்சி செய்துள்ளனர்.

## அடிமை வம்சம் (1206-1290)

- Ø இந்தியாவில் முஸ்லீம்களின் ஆட்சி முகமது கோரியால் கி.பி.(பொ.ஆ) 12 ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட்டது.
- Ø அவருக்கு மகன்கள் இல்லாத காரணத்தால் பன்டகன் (இராணுவப் பணிக்காக விலைக்கு வாங்கப்பட்ட அடிமைகளைக் குறிக்கும் பாரசீக சொல்) எனும் தனிவகை அடிமைகளைப் பேணினார்.
- Ø 1206 இல் கோரியின் இறப்பிற்குப் பின்னர், அவரின் அடிமையான குத்புதீன் ஐபக் இந்தியாவிலிருந்த துருக்கியப் பகுதிகளுக்கு அரசராக தன்னை அறிவித்துக்கொண்டார்.
- Ø அடிமை வம்சத்தின் ஆட்சிக்கான அடிக்கல்லை அவர் நாட்டினார். இவ்வரச மரபு ”மம்லுக்” அரச மரபென்றும் அழைக்கப்பட்டது.
- Ø மம்லுக் எனும் அராபிய வார்த்தைக்கு “அடிமை” என்று பொருள்.

- Ø குத்புதீன் ஐபக், சம்சுதீன் இல்துமிஷ், கியாசுதீன் பால்பன் ஆகிய மூவரும் இம்வம்சத்தைச் சேர்ந்த மூன்று மாபெரும் சுல்தான்கள் ஆவர்.
- Ø அடிமை வம்சத்தினர் இத்துணைக்கண்டத்தை எண்பத்து நான்கு ஆண்டுகள் ஆட்சி செய்தனர்.

**குத்புதீன் ஐபக்** (1206-1211)

Ø மாம்லுக் மரபினை நிறுவியவர் குத்புதீன் ஐபக். இவர் இந்தியாவில் துருக்கிய ஆதிக்கத்தை தொடங்கி வைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

Ø "மாம்லுக்" - குரானின்படி "அடிமை"யை குறிக்கும் சொல் ஆகும். ஹாசன்நிசாமி, பக்ரேமுதிர் போன்ற அறிஞர்களை ஆதரித்தார்.

- Ø இவர் பல இலட்சங்களை கொடையாக வழங்கியதால் "லக்பாக்க்ஷா" என புகழப்பட்டார்.
- Ø குத்புதீன் லாகூரைத் தலைநகராகக் கொண்டு தனது ஆட்சியைத் தொடங்கினார்.
- Ø பின்னர் தனது தலைநகரை டெல்லிக்கு மாற்றினார்.
- Ø கீழை கங்கைச் சமவெளியைக் (பீகார், வங்காளம்) கைப்பற்றும் பொறுப்பைப் பக்தியார் கல்ஜி என்பாரிடம் ஒப்படைத்தார்.
- Ø ஐபக் டெல்லியில் குவ்வத்-உல்- இஸ்லாம் மஸ்ஜித் எனும் மசூதியைக் கட்டினார். அதுவே இந்தியாவிலுள்ள மிகப் பழமையான மசூதி எனக் கருதப்படுகிறது.
- Ø குதுப்மினாருக்கு அவரே அடிக்கல் நாட்டினார். ஆனால் அவரால் அப்பணிகளை முடிக்க இயலாமல் போயிற்று. அவருடைய மருமகனும் அவருக்குப் பின் ஆட்சிப் பொறுப்பேற்றவருமான இல்துமிஷ் குதுப்மினாரைக்கட்டி முடித்தார்.

Ø கி.பி.1210ம் ஆண்டு குதிரை மீது அமர்ந்து போலோ விளையாடிக்கொண்டிருந்த போது குத்புதீன் நிலை தடுமாறி விழுந்து இறந்துபோனார்.

**<u>இல்துமிஷ் (கி.பி.1211 - கி.பி.1236)</u>**

- Ø மத்திய ஆசியாவில் வாழ்ந்த இல்பாரி என்ற பழங்குடி இனத்தில் பிறந்தவர். சிறுவனாக இருந்தபோதே குத்புதீனுக்கு அடிமையாக விற்கப்பட்டார்.
- Ø ஐபக்கின் மகன் ஆரம் ஷா திறமையற்றவராக இருந்தார். எனவே துருக்கியப் பிரபுக்கள் ஐபக்கின் படைத்தளபதியும் மருமகனுமான இல்துமிஷைச் சுல்தானாகத் தேர்வு செய்தனர்.
- Ø இவருடைய ஆட்சியின்போது தான் மங்கோலியர்கள் செங்கிஸ்கானின் தலைமையில் இந்தியாவின் எல்லைப்பகுதிகளை அச்சுறுத்தினர்.
- Ø மங்கோலியர்கள் தாக்குதல் மேற்கொண்டால் அதை எதிர்கொள்வதற்காகத் துருக்கியப் பிரபுக்கள் நாற்பதுபேரைக் கொண்ட ஒரு குழுவை உருவாக்கினார். அக்குழு “சகல்கானி“ அல்லது நாற்பதின்மர் என அறியப்பட்டது.
- Ø இல்துமிஷ் தனது படைகளில் பணியாற்றியோர்க்கு “இக்தாக்களை“ (நிலங்கள்) வழங்கினார்.
- Ø “இக்தா“ என்பது ராணுவ அதிகாரிகளுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியத்திற்காகக் கொடுக்கப்பட்ட நிலமாகும்.
- Ø நிலத்தைப் பெற்றவர் இக்தாதார். தனக்கு வழங்கப்பட்ட நிலங்களிலிருந்து வரிவசூல் செய்து கொள்வார்.

.

- ø இல்துமிஷ் வெளியிட்ட "டங்கா" என்ற வெள்ளி நாணயம் 175 கி. எடை கொண்டது. "ஜிடால்" என்ற செம்பு நாணயமும் அவர் வெளியிட்டார்.
- ø குதுப்-உத்-தீன்-பக்தியார் என்ற சூ∴பித் துறவியின் நினைவாக குதுப்மினார் என்ற கோபுரத்தைக் குத்புதீன் ஐபெக் கட்டத்தொடங்கினார். அதனை இல்துமிஸ் கட்டி முடித்தார்.
- ø இல்துமிஷ் படை பிரிவில் "நாற்பதின்மர் குழு" என்ற தொகுதிமுறை உருவாக்கப்பட்டது. அவர்கள் சகல்கான்கள் எனப்பட்டனர்.
- ø அராபிய மொழியில் நாணயங்கள் வெளியிட்ட முதல் துருக்கியர் இல்துமிஷ்.
  - ø இருபத்தாறு ஆண்டுகள் ஆட்சிபுரிந்த இல்துமிஷ் 1236 ஏப்ரல் மாதம் இயற்கை எய்தினார்.

**<u>இரசியா</u>** <u>(**கி.பி** 1236- 1240)</u>

- ø இல்துமிஷ்மின் திறமை வாய்ந்த மகன் ருக்குதீன் பிரோஷ் மரணமுற்றதால், இல்துமிஷ் தனது மகளான ரஸ்ஸியா சுல்தானாவைத் தனக்குப் பின்னர் டெல்லியின் அரியணைக்கான வாரிசாக அறிவித்தார்.
- ø ரஸ்ஸியா, ஜலாலுதீன் யாகுத் எனும் எத்தியோப்பிய அடிமையைத் தனது தனி உதவியாளராக நியமித்து அவரைப் பெரிதும் நம்பத் தொடங்கினர்.
- ø அப்போக்கு துருக்கிய பிரபுக்கள் கலகம் செய்யக் காரணமாயிற்று.
- ø அவருக்கு எதிராகத் துருக்கிய பிரபுக்கள் செய்த சதியால் 1240 இல் ரஸ்ஸியா கொலையுண்டார்.
- ø சுல்தான்கள் வரிசையில் வந்த முதல் பெண் அரசி "**சுல்தானா இரசியா**"

**பால்பன் கி.பி**.1246- 1287)

- கியாசுத்தின் பால்பன் துருக்கிய இனத்தில் **இல்பாரி** என்னும் பிரிவைச் சார்ந்தவர்.
- தெய்வீக உரிமை கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டவர்.
- **பைபோஸ்** என்னும் புதிய வணக்க முறையை நடைமுறைப்படுத்தினார்.
- பைபோஸ் முறைப்படி மன்னரைச் சந்திக்க வருபவர், அவரது காலை முத்தமிட்டு வணங்கவேண்டும்.
- பால்பன் ஓர் அடிமையாக, தண்ணீர் சுமக்கும் தொழிலாளியாக வேட்டைக்காரனாக, தளபதியாக, இராஜதந்திரியாக சுல்தானாக வாழ்ந்தவர். அதோடு டெல்லி சுல்தான்களில் குறிப்பிடத்தக்கவர். - லேன்புல் கூற்று.
- தெய்வீகக் கோட்பாடு என்பது அரசர் கடவுளின் பிரதிநிதியாகக் கருதப்படுவதாகும்.
- பால்பன் **இந்தியக் கிளி** எனப் பாராட்டப்பட்ட **அமீர்குஸ்ருவையும்**. **அமீர்ஹாசன்** என்ற அறிஞரையும் ஆதரித்தார்.
- அடிமைவம்ச மன்னர்களில் சிறந்த மன்னராக **பால்பன்** திகழ்ந்தார்.
    - “நாற்பதின்மர்” என்றறியப்பட்ட துருக்கியப் பிரபுக்கள் குழு அவரோடு பகைமை பாராட்டியதால் அவ்வமைப்பைப் பால்பன் ஒழித்தார்.
    - பால்பனுக்கு எதிராகக் கலகம் செய்ததால் வங்காள மாகாண ஆளுநராக இருந்த துக்ரில்கான் கைது செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார்.
    - அதன் பின்னர் ஜலாலுதீன் முறையாக அரியணை ஏறினார். அவரிலிருந்து கில்ஜி வம்சத்தின் ஆட்சி தொடங்கிற்று.

## <u>கில்ஜி அரச வம்சம் ( 1290- 1320)</u>

<u>ஜலாலுதீன் கில்ஜி ( 1296-1316)</u>

- ஜலாலுதீன் ஆட்சியின்போது பல படையெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் பெரும்பாலான படையெடுப்புகளைத் திட்டமிட்டுத் தலைமையேற்று நடத்தியது காராவின் ஆளுநரான அலாவுதீனின் கில்ஜி ஆவார். அவர் ஜலாலுதீனின் உடன் பிறந்தோரின் மகனாவார்.
- அவரின் முக்கியப் படையெடுப்பு தக்காண அரசான தேவகிரிக்கு எதிராக மேற்கொண்டதாகும்.
- அலாவுதீன் தேவகிரி யாதவ அரசர் ராமச்சந்திரனைத் தோற்கடித்த பின்னர் அந்நகரைக் கொள்ளையடித்துப் பெருஞ்செல்வத்தோடு திரும்பினர். பின்னர் ஜலாலுதீனை வஞ்சகமாகக் கொன்றார்.
- அதனைத் தொடர்ந்து 1296ல் தன்னை டெல்லியின் சுல்தானாக அறிவித்துக்கொண்டார்.

<u>**அலாவுதீன் கில்ஜி** (**கிபி**.1296 - 1316)</u>

- டெல்லி சுல்தான்களில், முதன் முதலில் தென்னிந்தியப் படையெடுப்புகளை மேற்கொண்டவர் அலாவுதீன் கில்ஜி ஆவார். அவரது நம்பிக்கைக்கு உரிய தளபதி **மாலிக்கபூரை** தென்னிந்திய அரசர்களுக்கு எதிராக அனுப்பினார்.
- தென்னிந்தியாவை சேர்ந்த தேவகிரியை ஆண்ட யாதவ அரசர் இராமச்சந்திரதேவன், வாரங்கல் அரசர் இரண்டாம் பிரதாபருத்ரன் மற்றும் ஹொய்சால அரசர் மூன்றாம் வீரபல்லாளன் ஆகியோர் தோற்கடிக்கப்பட்டு திறை செலுத்தும் அரசர்கள் ஆகினர்.
- அலாவுதீன் கில்ஜி தம்மை கடவுளின் பிரதிநிதியாக கருதினார்.

Ø நிரந்தரமான பெரும் படையை உருவாக்கினார். படைப்பிரிவில் குதிரைகளுக்கு சுடுபோடும் **தாக்** முறையை அறிமுகப்படுத்தினார்.

Ø வாழ்க்கைக்கு தேவைப்படும் பொருட்களின் விலைகளை நிர்ணயித்து அங்காடி சீர்திருத்தங்களை மேற்கொண்டார். அஞ்சல் முறையை மேம்படுத்தினார்.

- Ø அலாவுதீன் டெல்லி சுல்தானியத்தை ஒருங்கிணைத்து உறுதிப்படுத்தினார்.
- Ø பஞ்சாபில் மங்கோலியர்களுக்கு எதிராக, ராஜஸ்தானத்திற்கும் குஜராத்திற்கும் எதிராக என அவருடைய படையெடுப்புகள் பாராட்டுக்குரியனவாகும்.
- Ø தனது தலைமைத் தளபதி மாலிக் கபூரை 1310ல் தென்புலத்தின் வெகுதொலைவிலுள்ள மதுரை வரை படையெடுக்கப் பணித்தார்.
- Ø தேவகிரி யாதவர்கள், துவாரசமுத்திரத்தின் ஹொய்சாளர்கள், வாரங்கல் காகதியர்கள், மதுரைப் பாண்டியர்கள் ஆகிய அனைவரும் அலாவுதீனின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டனர்.

**சித்தூர் சூறையாடல்** (1303)

சித்தூர் ராஜபுத்திரப் படைகளை அலாவுதீனின் படைகள் திணறடித்த நிலையில் தோல்வியடைந்து விடுவோம் என்ற சூழலில் கோட்டைக்குள் இருந்த ஆடவரும் பெண்டிரும் தங்களது பண்டைய மரபின்படி “ஜவ்ஹர்” எனப்படும சடங்கை நடத்தினர், இதன்படி ஆடவர் கோட்டையை விட்டு வெளியேறிப் போர்க்களத்தில் மாள்வர். பெண்கள் தீப்புகுந்து தங்களை மாய்த்துக் கொள்வர்.

- Ø டெல்லியிலும் ஏனைய இடங்களிலும், முகாமிட்டிருந்த தனது படைப் பிரிவுகளுக்காகக் கட்டாய உணவு தானியக் கொள்முதல் முறையை அறிமுகம் செய்தார்.
- Ø கொள்முதல் விலை சுல்தானால் நிர்ணயம் செய்யப்பட்டது.
- Ø அலாவுதீன் 1316ல் இயற்கை எய்தினார்.

- அவருடைய வழித்தோன்றல்கள் அதிகாரத்தைத் தக்க வைத்துக்கொள்வதில் தோல்வியுற்றதால் கியாசுதீன் துக்ளக் என்பவர் அதிகாரத்தைத் கைப்பற்றி துக்ளக் அரசவம்ச ஆட்சிக்கு அடிக்கல் நாட்டினார்.

**துக்ளக் அரசவம்சம்** (1320-1324)

- அலாவுதீன் கில்ஜியின் இறப்பைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் குழப்பத்தின் காரணமாக டெல்லி சுல்தானியம் பல பகுதிகளை இழக்க நேரிட்டது.
- அவற்றை மீட்பதே கியாசுதீனுக்குப் பெரும் பணியாக அமைந்தது.
- ஜானாகான் முகமதுபின் துக்ளக் எனும் பெயரோடு 1325ல் அரியணை ஏறினார்.

**முகமது பின் துக்ளக்** (1325- 1351)

- முகமது பின் துக்ளக் மிகவும் கற்றறிந்த மனிதர். ஆனாலும் அவர் குரூரம் நிறைந்தவராவார்.
- அலாவுதீன் நாடுகளைக் கைப்பற்றினார், கொள்ளையடித்தார். ஆனால் முகமது பின் துக்ளக் இத்துணைக்கண்டம் முழுவதையும் தனது நாடாக மாற்றக் கனவு கண்டார்.
- தனது இறையாண்மையை விரிவு செய்வதற்கு வசதியாக தனது தலைநகரை டெல்லியிலிருந்து நாட்டின் மையப்பகுதியிலிருந்த தேவகிரிக்கு மாற்றினார்.
- தேவகிரியின் பெயரையும் தௌலதாபாத் என மாற்றினார்.
- தனது திட்டம் தவறானது என முகமது பின் துக்ளக் உணர்ந்ததால் மீண்டும் டெல்லிக்கே திரும்புமாறு அனைவருக்கும் ஆணையிட்டார்.
- சுல்தானுடன் டெல்லி திரும்பிய மொராக்கோ நாட்டுப் பயணியான இபன்பதுதா டெல்லியை அடைந்தபோது அது,

"காலியாக, கைவிடப்பட்டதாக ஆனால் குறைந்தளவு மக்களுடன் இருந்தது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

- முகமது பின் துக்ளக் சுல்தானாக இருபத்தைந்து ஆண்டுகள் ஆட்சிபுரிந்தார்.
- துக்ளக் 1351 மார்ச் 23ல் மரணமடைந்தார்.
- கிபி.1325இல் இளவரசர் ஜூனாகான் "**முகமதுபின் துக்ளக்**" என்ற பட்டப் பெயருடன் அரசரானார்.
- தமது தலைநகரை **டில்லியிலிருந்து தேவகிரிக்கு** மாற்றினார்.
- முகமதுபின் துக்ளக் **அடையாள நாணயத்தை** அறிமுகப்படுத்தினார்.
- துக்ளக் வெள்ளி தாங்கா நாணயங்களுக்கு பதில் **செப்பு** நாணயங்களை வெளியிட்டார்.
- முகமதுபின் துக்ளக் ஏற்படுத்திய திட்டங்கள் அனைத்துமே சிறந்தவைகள் ஆகும். ஆனால் சூழ்நிலைகளை அறிந்து அவற்றை நடைமுறைப்படுத்தவில்லை. எனவேதான் அவரது திட்டங்கள் அனைத்தும் தோல்வியில் முடிந்தன.

**பிரோஸ் துக்ளக் (கிபி.**1351 -1388)

- முகமது பின் துக்ளக்கைத் தொடர்ந்து கியாசுதீனின் இளைய சகோதரரின் மகனான பிரோஷ் அரியணை ஏறினார்.
- அவரால் கிளர்ச்சிகளை அடக்கவும் இயலவில்லை, பிரிந்துசென்ற மாகாணங்களை மீட்கவும் முடியவில்லை.
- பிரோஷா துக்ளக்கின் இறுதி நாட்கள் மகிழ்ச்சி நிறைந்தவையாக இல்லை. அவருடைய மகன் முகமது கான் தந்தைக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார்.
- 1388 இல் தனது 83வது வயதில் பிரோஷ் ஷா துக்ளக் இயற்கை எய்தினார்.

- Ø முகமதுபின் துக்ளக்கினால் வழங்கப்பட்ட **தக்காவி** என்னும் விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்தார்.
- Ø மக்களிடமிருந்து நான்கு வகையான வரிகளை வசுலித்தார்.

  **கரோஜ்** - விளைச்சலில் பத்தில் ஒரு பங்கு

  **கம்ஸ்** - போர்களில் கைப்பற்றிய பொருட்களில் ஐந்தில் ஒரு பங்கு

  **ஜெஸியா** - முஸ்லிம் அல்லாதவர்களள் மீது விதிக்கப்பட்ட வரி

  **ஜகாத்** - குறிப்பிட்ட இஸ்லாமிய சடங்குகளை செய்வதற்கு வசூலிக்கப்படும் கட்டணம்.

Ø **நீர்பாசன வரிவிதித்த** முதல் சுல்தான் இவர்.

Ø பெரோஸ் துக்ளக் பொதுப்பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

Ø **பதூஹத் - இ - பெரோஷாஹி** என்னும் தன்வரலாற்றுநூலை எழுதினார்.

Ø ஜியா உல்பரணி என்ற அறிஞரை ஆதரித்தார். இவரது காலத்தில் **குதுப்-பெரோஸ்-ஷாஹி** என்ற நூலும் எழுதப்பட்டது.

**<u>தைமூர் படையெடுப்பு (கிபி.</u>**<u>1398)</u>

Ø சாமர்கண்ட் பகுதியை தைமூர் என்பவர் ஆட்சி செய்தார். இவர் இந்திய நாட்டு செல்வ செழிப்பை அறிந்ததால் இந்தியாவின் மீது படையெடுக்க முடிவெடுத்தார்.

Ø கிபி.1398ல் டெல்லி தைமூரால் கைப்பற்றப்பட்டது. டெல்லி மக்களை கொன்று குவித்தார்.

- Ø பிரோஷ் ஷா துக்ளக் மரணமுற்று பத்தாண்டுகள் கழிந்த நிலையில் “தாமர்லைன்” என்றழைக்கப்பட்ட தைமூர் டெல்லியைத் தாக்கிச் சூறையாடி மாபெரும் மனிதப் படுகொலையை அரங்கேற்றினார்.

- தைமூரின் படையெடுப்பால் டெல்லிக்கு அடுத்ததாக அதிகம் பாதிப்புக்கு உள்ளான பகுதி பஞ்சாப் ஆகும்.
- தங்கம், வெள்ளி, நகைகள் என பெரும் செல்வத்தைக் கொள்ளையடித்து எடுத்துச்சென்றார்.
- மேலும் தைமூர் செல்லும்போது சாமர்கண்டில் நினைவுச்சின்னங்களைக் கட்டுவதற்காகத் தச்சுவேலை செய்வோர், கட்டடக் கலைஞர்கள் போன்ற இந்தியக் கைவினைஞர்களையும் உடன் அழைத்துச் சென்றார்.

Ø தைமூரின் படையெடுப்பு துக்ளக் மரபின் வீழ்ச்சிக்கு அடிகோலியது.

**<u>சையதுமரபு (கிபி.</u>**<u>1414-1451)</u>

Ø துக்ளக் மரபின் வீழ்ச்சிக்கு பின்னர் சையது மரபினர் டெல்லியை ஆளத் தொடங்கினார்கள்.

Ø தைமூர் படையெடுப்பால் டெல்லிப் பகுதியில் நிகழ்ந்த அரசியல் குழப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட முல்தானின் ஆளுனர் **கிஸிர்கான்**, (கிபி.1414-1421) டெல்லியின் ஆட்சியைக் கைப்பற்றி கிபி.1414 இல் சையது மரபினைத் தொடங்கினார்.

Ø கிஸிர்கானின் இறப்பிற்கு பின்னர் அவரது மகன் **முபாரக்ஷா** மன்னரானார்.

Ø இவர் டெல்லி நீதிமன்றத்தில் இந்து மத உயர் குடியினரை நியமித்தார். யமுனை நதிக்கரையில் **முபாரக்பாத்** என்னும் நகரை நிர்மானித்தார்.

Ø இந்நிலையில் கிபி.1434ல் முபாரக் கொல்லப்பட்டார்.

Ø முபாரக் மரணத்தை அடுத்து அவரது சகோதரனின் மகனான **முகமதுஷா** மன்னரானார்.

- Ø லாகூர் ஆளுனர் பஹ்லுல் லோடி உதவியுடன் மாளவத்தின் மீது படையெடுத்து அதனை வென்றார். இவ்வெற்றிக்குக் காரணமான பஹ்லுல் லோடிக்கு “**கானிகானா**” என்ற பட்டத்தைச் சுட்டினார்.
- Ø கிபி.1445ல் முகமது ஷா இயற்கை எய்தினார்.
- Ø முகமதுஷாவை அடுத்து **அலாவுதீன் ஷா** மன்னரானார்.
- Ø இவர் திறமையற்று செயல்பட்டதால் லாகூரின் ஆளுநர் **பஹ்லுல் லோடி** டெல்லியின் ஆட்சியை கைப்பற்றினார்.
- Ø அதோடு அலாவுதீன் ஷாவுக்கு கட்டாய ஓய்வளித்தார்.
- Ø கிபி.1457ல் சையது வம்சம் முடிவுக்கு வந்தது.
- Ø தைமூர் டெல்லியை விட்டுச்செல்வதற்கு முன்பாக கிசிர்கான் என்ற தனது பிரதிநிதியை ஆளுநராக நியமித்துச் சென்றார்.
- Ø அவர் 1414ல் சையது அரச வம்சத்தைத் தோன்றுவித்தார். அவ்வரச வம்சம் 1451 வரை நீடித்தது.
- Ø அவ்வம்சத்தின் கடைசி சுல்தான் அலாவுதீன் ஆலம் ஷா 1451ல் அரச பதவியைத் துறந்தார்.
- Ø இது சிர்ஹிந்த் (பஞ்சாப்) பகுதியின் ஆளுநராக இருந்து பகலூல் லோடிக்கு டெல்லியின் சுல்தானாகும் வாய்ப்பினை வழங்கியது.
- Ø அவரே லோடி வம்ச ஆட்சியைத் தோற்றுவித்தார்.

**<u>லோடிமரபு</u>**

- Ø டெல்லியில் ஆண்ட சுல்தான்களில் லோடி மரபே இறுதியாக ஆட்சி செய்தது.
- Ø இம்மரபைத் தொடங்கி வைத்தவர் **பாஹ்லால் லோடி** ஆவார்.
- Ø இவர் அரியணையில் அமராமல் உயர்குடியினருடன் கம்பளத்தில் அமர்ந்து ஆட்சி செய்தார்.
- Ø 1489ல் பகலூல் லோடியைத் தொடர்ந்து அவரது மகன் சிக்கந்தர் லோடி சுல்தானாகப் பொறுப்பேற்றார்.

Ø **சிக்கந்தர்ஷா** என்ற பட்டப்பெயருடன் ஆளத் தொடங்கினார்.

Ø தமது பேரரசை பஞ்சாப் முதல் பீகார் வரை விரிவடையச்செய்தார். ஆக்ரா நகரை கட்டினார்.

Ø செனாய் இசையை இவர் மிகவும் விரும்பினார்.

Ø **லஹ்ஜட்-இ-சிக்கந்தர் ஷாஹி** என்ற இசைத்தொகுப்பு இவர் காலத்தில் உருவாக்கப்பட்டது.

Ø லோடி மரபின் சிறந்த அரசான இவர் கிபி.1517இல் மரணமடைந்தார்.

**<u>லோடி மரபின் முடிவு</u>**

Ø சிக்கந்தர் லோடியை அடுத்து **இப்ராஹிம் லோடி** பட்டமேற்றார்.

Ø தவுலத்கான் லோடியின் மகன் தில்வர்கான் லோடியை இவர் கொடுமைப்படுத்தியதால் தவுலத்கான் லோடி காபுல் மன்னர் பாபரை உதவிக்கு அழைத்தார்.

Ø **பாபர்** தமது பெரும் படையுடன் இந்தியாவிற்கு வந்து **கிபி**.1526**ல் நடைபெற்ற முதலாம் பானிபட்** போரில் **இப்ராஹிம் லோடியை** வென்றார்.

Ø இந்த வெற்றியானது டெல்லியில் சுல்தான்களின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து முகலாயர் ஆட்சியை தொடங்கி வைத்தது.

**<u>சுல்தான்களின் ஆட்சியின் நிர்வாகம்</u>**

Ø கிபி.1206முதல் 1526 வரை 320 ஆண்டுகள் ஆண்ட டெல்லி சுல்தான்களின் ஆட்சியானது இராணுவ ஆட்சியாக இருந்தது.

**<u>சுல்தான்களின் அமைச்சர்கள்</u>**.

Ø **வசீர்** - பிரதம அமைச்சர் மற்றும் நிதியமைச்சர்

Ø **திவானி ரிஸாலத்** - வெளியுறவு அமைச்சர்

Ø **சுதர்-உஸ்-சாதர்** - இஸ்லாமியச் சட்ட அமைச்சர்

- **திவானி இன்ஷா** - அஞ்சல்துறை அமைச்சர்.
- **திவானி அர்ஸ்** - பாதுகாப்பு அல்லது படைத்துறை அமைச்சர்
- **காஸி-உல்-கஸாத்** - நீதித்துறை அமைச்சர்

**நகர நிர்வாகம்**

- பேரரசு பல இக்தாக்களாகப் பிரிக்கப்பட்டன. அதனை நிர்வகித்தோர் **இக்தார்** என்றழைக்கப்பட்டனர்.
- **இக்தாக்கள் ஷிக்**, **பர்கானா**, **கிராமங்கள்** ஆகிய உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டன.
- **ஷிக்** பகுதியின் நிர்வாகி **ஷிக்தார்** என்று அழைக்கப்பட்டார். பர்கானாவின் முக்கிய அலுவலர்கள் **அமில்** அல்லது **முன்ஷிப்** என்று அழைக்கப்பட்டனர். மேலும், **கருவூலர்**, **அனுங்கோ** ஆகியோர் நிர்வாகத்தில் இடம்பெற்றனர்.
- நீதித்துறையில் தலைமை நீதிபதி **காஸி-உத்-கவாத்** எனப்பட்டார்.

**கலை மற்றும் கட்டடக்கலை**

சுல்தான்களின் கட்டட அமைப்பை மூன்று வகைப்படுத்தலாம்.

- 1.டெல்லி அல்லது பேரரசு கலைபாணி,
  2.நகரக் கலைபாணி,
  3.இந்துக்கள் கலைபாணி.
- குதுப்மினார், குவாத் உத் இஸ்லாம் மசுதி, பால்பனின் சமாதி ஆகியன மாம்லுக் கால அழகிய கட்டடங்களாகும்.
- டெல்லியில் அமைந்துள்ள சீரி நகரம் ஹரத்நிஜாமுதின் அலுயாவின் தர்கா, அலாய்தார்வாசா ஆகியவை கில்ஜி காலக்கட்டடக்கலைக்கு எடுத்துக்காட்டாகும்.

**<u>இலக்கியம்</u>**

Ø **உருதுமொழி** சுல்தான்களின் காலத்திலேயே உருவாக்கப்பட்டது.

Ø **அல்பருனி** என்ற அறிஞர் அரபு, பாரசீக மொழிகளில் புலமை பெற்றிருந்தார்.

Ø இவர் **கிதாப்-உல்-இந்த்** என்ற நூலை இயற்றினார்.

Ø இந்தியாவில் பல்லாண்டு காலம் தங்கியிருந்து இவா் கஜினி முகமது அவையிலும் இடம்பெற்றிருந்தார்.

Ø சுல்தான்களின் ஆட்சியில் **நீதிமன்றத்தில் பாரசீக மொழி** நடைமுறையில் இருந்தது.

Ø கிபி.1526ல் முதலாம் பானிப்பட் போரில் லோடி வம்சம் முடிவுக்கு வந்ததால் சுல்தான்களின் ஆட்சியும் முற்றுப் பெற்றது.

Ø **டெல்லியைத்** தலைநகராகக் கொண்டு முகலாயப் பேரரசு உருவானது.

********